மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.22/2023

பெயர் – சின்னத்தாய் (பி.வா.சா.2)

நாள் – 12.02.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நானும், வாதியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. எனது தங்கைக்காக நான் வந்தேன். எனக்கு என்ன வயது என்றால் 47 ஆகும். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பேரையூர் அருகில் உள்ள சின்னையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் வாதி என்ன பாரிகாரம் கோரியுள்ளார் என்றால் எங்கள் தகப்பனாரின் சொத்தை வைத்துக் கொண்டு தர மறுக்கிறார்கள். சின்னையாபுரத்தில் எவ்வளவு காலம் குடியிருந்து வருகிறேன் என்றால் 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்திற்கான பட்டா எண் என்ன என்றால் 350 ஆகும். தாவா சொத்திற்கான நான்குமால்கள் என்ன என்றால் வடக்கு காளியம்மன் கோவில், சின்னகுட்டி வீடு உள்ளது. தெற்கு பக்கம் ஆதன் வீடு உள்ளது. மேற்கு பக்கம் அழகர்சாமி வீடு உள்ளது. கிழக்கு பக்கம் முன்பு ஓடையாக இருந்து தற்போது ரோடாக உள்ளது. சாட்சி சொல்லுவதற்கு என்னை எனது தங்கை காளியம்மாள் அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி தாவா சொத்தை வைத்துக் கொண்டு திரும்ப ஒப்படைக்கவில்லை என்பதற்காக வாதி மீது நானும், எனது சகோதரியோ இந்த வழக்கிற்கு முன்பாக நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்லுவது போல் தாவா சொத்து எனது தகப்பனாருக்கோ, எங்களுக்கோ பாத்தியமில்லை என்றாலும், வழக்கிற்காக நான் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தகப்பனாரோ, நாங்களோ எப்போதும் அனுபவித்தது இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்தை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கான ஆவணங்களை எதையாவது தாக்கல் செய்தோமா என்றால் பட்டா தாக்கல் செய்தோம். பட்டா எனது தகப்பனார் நாராயணன் பெயரில் உள்ளது. பட்டா எங்கள் பெயரில் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் படிக்கவில்லை என்பதால் இதுவரை எடுக்கவில்லை. தாவா சொத்து

எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதாலும், எங்கள் அனுபவித்தில் இல்லாத காரணத்தினால் தான் தாவா சொத்திற்கான பட்டா மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையை இதுவரை மேற்க்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் எங்கள் அனுபவத்தை காண்பிப்பதற்காக பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமான பட்டாவாக தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 தவறான ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 வழங்குவதற்கு முன்பாக வருவாய் துறையினர் வாதி அவரது பெற்றோர் மற்றும் முன்னோர்களை முறையாக விசாரணை செய்யாமல் தவறுதலாக வழங்கிய பட்டா என்றால் சரியல்ல. எனவே பி.வா.சா.ஆ.1 ஆவணம் எனது தகப்பனாருக்கோ, எங்களுக்கோ தாவா சொத்தின் பேரில் எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இருப்பதாக சொல்லுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றாலும், தபசில் சொத்து எனது சகோதரி மற்றும் எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரியும் மோசடியாக தபசில் சொத்தை வாதியிடமிருந்து பறிக்கும் நோக்கத்தோடு, நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது சகோதரி என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.